12325

சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் (சஉ-சி) துறை

அரசு கடித (நிலை) எண் 151/சஉ.சி1/2003-1 நாள் 11-8-2003

அனுப்புநர்
திருமதி சி.கே.கரியாலி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்
ஊரக வளர்ச்சி இயக்குநர்/நகராட்சி நிர்வாக ஆணையர்
திட்ட ஒருங்கிணைப்பாளர், உலக வங்கி உதவி பெறும்
ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3,
சென்னை-115.

அம்மா,

பொருள்: சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டம் – புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம் – உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3 மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகிய திட்டங்களின் கீழ் பணியாற்றும் அமைப்பாளர், அங்கன்வாடி பணியாளர்கள், சமையலர்கள் மற்றும் உதவியாளர்கள் ஆகியோரின் பணியில் காணப்படும் முறைகேடுகளுக்காக தற்காலிகப் பணி நீக்கம் செய்தல் ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல் தொடர்பான அறிவுரைகள் மீண்டும் வழங்குதல்.

பார்வை:
1) அரசு ஆணை (நிலை) எண் 370, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டம், நாள் 16-4-89
2) அரசுக் கடிதம் (நிலை) எண் 16, சமூக நலம் (ம) சத்துணவுத் திட்டம், நாள் [illegible]-1-92

பார்வையில் காணும் அரசாணை மற்றும் கடிதம் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது.

புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவுத் திட்டம், உலக வங்கி உதவி பெறும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம்-3 மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் ஆகியவற்றில் பணியாற்றும் அமைப்பாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் உதவியாளர்கள், சமையல் மற்றும் சமுதாய ஊட்டச்சத்து பணியாளர்கள் ஆகியோர் பார்வை 1-ல் குறிப்பிட்ட அரசாணையின்படி அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளின் கீழ் "பகுதி நேர நிரந்தரப் பணியாளர்கள்" என வகைப்படுத்தப்பட்டுள்ளார்கள். எனினும், அவர்களுக்கான அரசுப் பணி விதிகள் ஏதும் வகுக்கப்படவில்லை. அவ்வப்போது வெளியிடப்படும் நிர்வாக ஆணைகளைக் கொண்டே, நிர்வகிக்கப் படுகின்றனர். ஆனால், அவர்களது பணிகளில் காணப்படும் முறைகேடுகளான, உணவு தயாரித்தல் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் உணவு வழங்குதலில் ஏற்படும் கவனக் குறைவு (உணவில் பல்லி விழுதல் சாம்பாரில் குழந்தைகள் தவறி

விடுதிப்) மாணவர்களின் வருகைக்கேற்ப உணவுப் பொருள்கள் சமையலுக்கு வழங்காமை, இருப்பு பதிவேட்டின்படி உணவு பொருட்கள் இல்லாதது போன்ற காரணங்களுக்காகவும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்களால் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டு ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இது தொடர்பாக பார்வை 2–ல் உள்ள கடிதத்தில் குறைந்தபட்ச இயற்கை நீதியின் அடிப்படையில் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் சத்துணவு மையப் பணியாளர்கள் தமது வேலை நேரத்தில் சத்துணவுக் கூடத்தில் பணிபுரியும்போது செய்யும் தவறுகளுக்கு உடனடியாகத் தற்காலிகப் பணி நீக்கம் செய்தபின், 21 நாட்களுக்குள் அன்னாரது விளக்கத்தைக் கேட்டு அறிக்கை அனுப்ப வேண்டும். 21 நாட்களுக்குள் விளக்கம் அனுப்பவில்லை எனில் அவர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக எண்ணி நிரந்தர பணி நீக்கம் செய்யலாம். குறிப்பிட்ட காலத்திற்குள் விளக்கம் அளிக்கப்பட்டால், அவர் செய்த குற்றத்தின் அடிப்படையில் தகுந்த மேல் நடவடிக்கை எடுத்து அவர் மீது 21 நாட்களுக்குள் இறுதி ஆணை பிறப்பிக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. ஆனால் சில காலங்களில் இத்தகைய அறிவுரைகள் சரியாக பின்பற்றப்படவில்லை என அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இத்தகைய காரணங்களினால் தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்ட சில பணியாளர்கள், தமிழ் நாடு நிர்வாகத் தீர்ப்பாயம், சார்நிலை நீதி மன்றங்கள் மற்றும் சென்னை உயர் நீதிமன்றம் ஆகிய நீதிமன்றங்களை அணுகி பிழைப்பூதியம் பெறுவதற்காகவும், மீண்டும் பணியமர்வதற்காகவும் வழக்கு தொடுத்து வருவது தற்பொழுது அதிகரித்துவருகிறது. தமிழ்நாடு தீர்ப்பாயமும், சென்னை உயர் நீதிமன்றமும் சில வழக்குகளில் தற்காலிகப் பணி நீக்கத்தில் உள்ளவர்களுக்கு பிழைப்பூதியம் வழங்க வேண்டும் என தீர்ப்பு வழங்கியுள்ளது. மேலும், உயர் நீதிமன்றம் ஒரு வழக்கில் கீழ்க்கண்டவாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

> "The right of an employee to subsistence is a fundamental and it cannot b denied by any employer. Therefore, not withstanding the fact that the TNC (D&A) Rules are not strictly applicable to the applicant, he is entitled t subsistence allowance because he is still retained in service and his service have not been terminated.

மேலும் சில வழக்குகளில் உச்ச நீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்புகளின் அடிப்படையில் சத்துணவு பணியாளர்களுக்கு அடிப்படை விதிகள் (Fundamental Rule) பொருந்தாது என்று கருதினால், அவர்கள் தற்காலிக பணி நீக்கக் காலத்திற்கு முழு ஊதியம் பெறத் தகுதி உடையவர் ஆகிறார்கள் என சட்டக் கருத்து வழங்கப்பட்டுள்ளது. மேலும் பகுதி நேரப் பணியாளராயினும் முழு நேரப் பணியாளராயினும், அரசு தொகுப்பு நிதியிலிருந்து (Contingencies Fund) ஊதியம் பெறும் பணியாளர்கள் அனைவருக்கும் அடிப்படை விதிகள் (Fundamental Rule) பொருந்தும் என சட்டக் கருத்து வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் மற்றும் சென்னை உயர் நீதிமன்ற ஆணைகளை நிறைவேற்றி பிழைப்பூதியம் வழங்க வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலைக்கு அரசு தள்ளப்பட்டுள்ளது. இதனால் அரசுக்கும் பெருமளவில் பொருளாதார நெருக்கடி ஏற்படக்கூடும்.

3) எனவே, மேற்கண்ட இக்கட்டான, இடர்பாடான சூழ்நிலையை தவிர்க்கும் பொருட்டு கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகின்றன.

மேலே பத்தி மூன்றில் குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக சத்துணவு அமைப்பாளர்கள் அங்கன்வாடிப் பணியாளர்கள், சமையலர்கள், உதவியாளர்கள் ஆகியோர் எப்பொழுது தற்காலிகப் பணி நீக்கத்தில் வைக்கப்பட்டாலும் அவர்கள் மீது உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். எந்த அரசு விதிகளையும் (17 அ, 17 ஆ, 17இ) குறிப்பிடாமல் குற்றக் குறிப்பாணை வழங்கப்பட வேண்டும். மேலும் குறிப்பிட்ட காலத்திற்குள் அவர்கள் புரிந்த குற்றங்கள் பற்றி விளக்கம் கோரப்பட்டு விளக்கம் பெற்றபின் உரிய ஆவணங்கள் கொண்டு விரைவாக விசாரணை நடத்தி ஒழுங்கு நடவடிக்கையை முடிவுக்கு கொண்டு வந்து வருடாந்திர ஊதிய உயர்வு நிறுத்தம்/கண்டனம்/ ஊதியத்தில் இருந்து குறிப்பிட்ட தொகையினை பிடித்தம் செய்தல்/வெகு தொலைவிலுள்ள அல்லது பிற மாவட்டங்களுக்கோ பணி மாறுதல் செய்தல், நிரந்தர பணி நீக்கம் போன்ற தண்டனைகளில் தகுதிவாய்ந்த ஒன்றினை 6 வார காலத்திற்குள் வழங்க வேண்டும். இதனால் தவறுகள் செய்து பாதிக்கப்பட்டவர்கள் தற்காலிகப் பணி நீக்க காலத்தில் பிழைப்பூதியம் பெறுவதற்கு நீதிமன்றங்கள், நிர்வாகத் தீர்ப்பாயங்களை நாடுவதை தவிர்க்கலாம். மேலும் அரசின் அறிவுரைப்படி குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுக்காமல் தவறுவதால் பாதிக்கப்பட்டவர்கள் நீதிமன்றங்கள்/நிர்வாகத் தீர்ப்பாயங்களை அணுகி பிழைப்பூதியம் பெறுவதற்கு தீர்ப்பு கிடைக்கப்பெற்றால் இதனால் ஏற்படும் இழப்பிற்கு அரசு பொறுப்பேற்காது என்றும் ஒழுங்கு நடவடிக்கையின் மீது உரிய காலத்திற்குள் இறுதி நடவடிக்கை எடுக்கத் தவறிய அலுவலர்களோ மாவட்ட ஆட்சித் தலைவர்களோ பொறுப்பாவார்கள் என்றும் இதன் மூலம் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே மேற்காணும் அறிவுரைகளை தவறாமல் பின்பற்றும்படி அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

4) இக்கடிதத்தினை பெற்றுக் கொண்டமைக்காக ஒப்புகையினை உடனடியாக அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

அரசு செயலாளருக்காக.

நகல்

சமூக நல இயக்குநர், சென்னை–5.

சத்துணவுத் திட்ட பிரிவு உதவி பிரிவு அலுவலர் 2 (ம) 3

சமூக நலம் 7 பிரிவு

சமூக நலம் 1 பிரிவு

இருப்புக் கோப்பு.